# 4 முளைப்பாரி – பாடல்

தன்னா னன்னே னானே தன
தானே னன்னே னானே
ஒண்ணாந்தான் நாளையிலே
ஒசந்த செவ்வா கிழமையிலே
ஓலைக்கொட்டான் இரண்டெடுத்து
ஓடும் பிள்ளை தொண்டலிட்டு – தன்னா
வாங்கியாந்த முத்துகளை
வாளியிலே ஊற வச்சி
கம்மந்தட்டை இரண்டெடுத்து
கணுக்கணுவா முறிச்சி வச்சி
சோளத்தட்டை இரண்டெடுத்து
சுளை சுளையா முறிச்சி வச்சி
மாட்டாந்தொழு தெறந்து
மாட்டெருவு அள்ளி வந்து – தன்னா
ஆட்டாந்தொழு தெறந்து
ஆட்டெருவு அள்ளி வந்து
கடுகுலயுஞ் சிறுபயிறு
காராமணிப் பயிறு
மிளகுளயுஞ் சிறுபயிறு
முத்தான மணிப்பயிறு
மொள போட்ட ஒண்ணா நாளு
ஒரெலையாம் முளைப்பாரி
ஒரெலைக்குங் காப்புக்கட்டி
ஒரு பானை பொங்கலிட்டு
முளைப்பாரி போடுங்கம்மா-------(2)
தன்னா னன்னே போடுங்கம்மா----(2)
தையலரே ஒரு குலவை – தன்னா

– நாட்டுப்புறப் பாடல்



பாடல்களைச் சொந்த நடையில் தாம் விரும்பும் வகையில் கருத்துகளை இணைத்துப்பாடுதல்

## வாங்க பேசலாம்



- பாடலை ஓசை நயத்துடன் பாடிக்காட்டுக.
- முளைப்பாரி பற்றி அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக
- இது போன்று வேறு பாடல்களைக் கேட்டறிந்து வந்து வகுப்பறையில் பாடி மகிழ்க.



### சிந்திக்கலாமா?

மாட்டு எருவையும், ஆட்டு எருவையும் வயலுக்கு இடவேண்டும் என்று தாத்தா கூறுகிறார் ஆனால் அப்பாவோ, உடனே பலன் தருவது செயற்கை உரம் தான் என்கிறார்.

யார் கூறுவது சரி?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### பொருள் தருக

01 முளைப்பாரி = ..........................................

02 தையலர் = ..........................................

03 ஓலைக்கொட்டான் = ..........................................

04 மாட்டாந்தொழு = ..........................................

05 ஆட்டாந்தொழு = ..........................................



## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 **இரண்டெடுத்து** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

அ) இரண் + டெடுத்து ஆ) இரண்டு + எடுத்து

இ) இரண்டெ + டுத்து ஈ) இரண்டெ + எடுத்து

02 **பொங்கலிட்டு** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

அ) பொங்கல் + இட்டு ஆ) பொங்கல் + லிட்டு

இ) பொங்க + இட்டு ஈ) பொங் + கலிட்டு

03 **ஆடு + எரு** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................................

அ) ஆடுஎரு ஆ) ஆடெரு

இ) ஆட்டெரு ஈ) ஆடொரு

04 **செவ்வாய் + கிழமை** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................................

அ) செவ்வாய்கிழமை ஆ) செவ்வாய்க்கிழமை

இ) செவ்வாகிழமை ஈ) செவ்வாக்கிழமை

05 கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

அ) சோளத்தட்டை = .................................. + ..................................

இ) மாட்டெரு = .................................. + ..................................

## இப்பாடலில் ஒரேசொல் இரண்டு முறை அடுத்தடுத்து வருவதைக் கண்டறிந்து எழுதுக –அடுக்குத்தொடர்.

எ.கா **கணுக்கணுவா**

______________

## இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

**எ.கா:** நாளையிலே, கிழமையிலே

______________ ______________

______________ ______________


**இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

எ.கா: ஓலைக்கொட்டான் ஓடும் பிள்ளை

______________ ______________

______________ ______________


**மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.**





1. .......................... ..........................
2. .......................... ..........................
3. .......................... ..........................
4. .......................... ..........................
5. .......................... ..........................
6. .......................... ..........................

## கலையும் கைவண்ணமும்

முளைப்பாரியை வண்ணமிட்டு மகிழ்க!...



## அறிந்து கொள்வோம்



நவதானியங்கள் எவை என அறிந்து கொள்வோமா...

- நெல்
- கோதுமை
- பாசிப்பயறு
- துவரை
- மொச்சை
- எள்
- கொள்ளு
- உளுந்து
- கடலை



## செயல் திட்டம்

- மாணவர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவாகப் பிரிந்து கொள்க. ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைக்கும் சிறு தானியங்களைக் கொண்டு முளைப்பாரியிட்டுக் கொண்டு வருக.



- பேச்சுவழக்குச் சொற்களுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களை எழுதுக

| பேச்சுவழக்கு | எழுத்துவழக்கு |
|---|---|
| 1. படிச்சான் | படித்தான் |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |